# முன்னுரை

காவிரிப் படுகையின் ஒரு பகுதிக்குப் பழைய நஞ்சை என்று பெயர். சங்கத் தமிழின் 'மருதம்' என்ற சொல்லை இதனோடு பொருத்தலாம். எல்லாருக்கும் இருப்பது போலவே இந்தப் புவிப் பரப்பை வாழிடமாகக் கொண்ட மக்களுக்கும் மண்ணோடு உறவு உண்டு. அந்த உறவின் தன்மை இன்னது என்று மற்றவற்றுக்கு முன்பு நிச்சயிப்பது காவிரி. பண்பாட்டு வழக்கங்களாக இந்த உறவு வடிவம் பெற்றிருக்கும். பண் பாட்டுத் தளத்தில் இந்த வடிவங்களைக் காட்டுவதற்கான முயற்சி இந்தக் கட்டுரைகள். ஊடல் மருதத்துக்கு உரியது என்பது இலக்கிய மரபு. எங் கள் ஊர்ப் பெருமாள் கோயிலில் மட்டையடித் திருவிழா என்ற ஊடல் விழா கன்னிப் பொங்கலில் நடக்கும். இலக்கிய மரபு ஒன்று பண்பாட்டுத் தளத்தில் ஏற்கும் வடிவத்துக்கு இது எடுத்துக்காட்டு. இப்படி வடிவங்களைக் காட்டும்போது பருவங்கள்தோறும் இந்த மருத நிலம் என்னென்ன அடையாளங்களோடு வரும், போகும் என்பதையும் சொல்ல வேண்டி யிருக்கிறது. மண்ணோடு வந்த உறவின் கூறுகளை இந்தப் பழைய நஞ் சையின் மொழி எப்படிக் கட்டமைத்துள்ளது என்பதை அதன் சொற் களே காட்டும். வாக்கியத்தின் சொற்களைக் கோக்கும் இலக்கணச் சரடு போலப் பண்பாட்டு வழக்கங்களைக் கோத்துக் காட்டுவது இந்த உறவு. கட்டுரைகள் பேசும் இரண்டு பொருட்களில் இது ஒன்று.

மற்றொன்று, இருந்த உறவுக்கு வந்த இடையூறுபற்றியது. இந்த உறவு சன்னமாக மாறுகிறது என்பதைவிட இற்றுப்போகிறது என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். வாழிடமாக இருக்கும் மண்ணுக்கு மனிதன் அந்நியமாகிறான். வானத்தின் கீழே இருந்துகொண்டே மண்ணுக்கு அந்நியமாவது எல்லா இடங்களிலும் நடப்பதுதான். காவிரிப் படுகையான மருதத்தில் அது என்ன வடிவம் ஏற்கிறது என்பதைக் காண்பது கட்டுரை களின் முயற்சி. காவிரி ஆறு வெறும் நீராகிறது, மண் உற்பத்திக் காரணியாக இறங்கி, வேறு தளத்தில் நிலைபெறுகிறது, விவசாயம் தானிய உற்பத்திக் கான பொருளாதாரச் செயல்பாடு மட்டுமே என்றாகிறது. இவையும், மற்றவையும் காவிரிப் படுகையில் எடுத்துக்கொள்ளும் வடிவங்களின் விவரிப்பு முயற்சியே இந்தக் கட்டுரைகள்.

Vanaththin kizhe copy.indd 7 30-12-2016 16:09:51

கல்லணையில் காவிரி மூன்றாகப் பிரியும். காவிரியும், அதன் இரண்டு கிளைகளில் ஒன்றான வெண்ணாறும் பாயும் பகுதி பழைய நஞ்சை. நான் வசிப்பது வெண்ணாற்றுப் பாசனப் பகுதி. வெண்ணாற்றுப் பாசனப் பகுதி யைப் பற்றிய தகவல்கள் கட்டுரைகளில் கூடுதலாகத் தெரியும். ஆற்றை வைத்தா ஒரு பகுதியை வரையறுப்பது என்று நீங்கள் கேட்கலாம். புவிப் பரப்புக்கு இங்கே ஆறு காட்டுவதுதான் அனுபவத்தில் உள்ள வரையறை. வட்டம், மாவட்டம் என்பதெல்லாம் புவியியல், புவி அமைப்பியலுக்குப் பொருந் தாத, எதேச்சாதிகாரமான வரையறை. நாம் மண்ணோடு முரண்பட்டு அதற்கு அந்நியமாவதன் முதல் அடையாளம் இது.

பழைய நஞ்சையின் மக்கள் வடக்கில் கொள்ளிடத்துக்கு வட கரையிலிருப்பவர்களை வடக்கத்தியார்கள் என்றும் தெற்கில் ஆவுடை யார்கோயிலுக்குத் தெற்கே இருப்பவர்களைத் தெற்கத்தியார்கள் என்றும் அழைத்துத் தங்களை வேறாகவே காட்டிக்கொள்வார்கள். வரைபடத்தில் இந்தப் பகுதியைக் கோடுபோட்டுக் காட்ட வேண்டிய சிரமம் இல்லை. மொட்டை மாடுகள் என்று சொல்லும் கொம்பு தீய்த்து, காது அறுத்த வண்டிமாடுகள் புழங்கும் பகுதி என்பதே இதன் சரியான அடையாள மாகும். இன்றைக்கும் இந்த நிலப் பரப்புக்கு இதை வாழிடமாகக் கொண்ட ஒரு விலங்கின் இருப்பு எல்லைகோலுகிறது என்பது முக்கியமான சங்கதி. பயணத்தின்போது நாம் ஒரு பகுதியின் எல்லையைக் கடப்பதை கண்ணில் படும் மாடுகள் சட்டென்று அடையாளம் காட்டும். மண்ணோடு இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கும் உறவுக்கு இது ஒரு அடையாளம். இந்தப் பகுதிக்கு மேற்கே இருக்கும் மாடுகளுக்குக் கொம்பு தீய்க்க மாட்டார்கள். அவற்றை மேற்கத்தி மாடு என்பார்கள்.

இவ்வாறே மற்றவற்றிலும் இந்தப் பகுதி எவ்வாறு தனக்கு எல்லை காட்டுகிறது என்பதைக் கட்டுரைகளில் சொல்கிறேன். மற்றவை பண்டிகைகள், திருவிழாக்கள், சமூக வழக்கங்கள், விவசாய முறைகள், சமூக உறவுகள், இப்படி எனக்குத் தெரிந்தவை.

சென்ற அறுபது ஆண்டுகளின் கால மாற்றத்தோடு எல்லாமே வேக மாக மாறியிருக்கின்றன. சில பழக்கங்கள் உள்கிராமங்களின் பழைய குடும் பங்களில் தொடர்ந்து இருக்கக்கூடும். இருந்தவற்றைக் கட்டுரைகளில் சொல்கிறேன். ‘பழைய குடும்பங்கள்’ என்ற தொடர், மொழியின் பொருளமைப்பில் ‘புதிய குடும்பங்கள்’ என்ற மறுமுனைத் தொனி ஒன்றைச் சொல்லாடலுக்குள் கொண்டுவரலாம். கிராமங்களில் இருந்த குடும்பங்கள் நகரங்களுக்கும், பெருநகரங்களுக்கும் கொத்துக்கொத்தாகக் குடிபெயர்வது சென்ற நூற்றாண்டின் முதற் காலில் துவங்கிக் காவிரிப் படுகையில் தொய்வில்லாமல் நடக்கிறது. சில கிராமங்களும், சிலவற்றின்

Vanaththin kizhe copy.indd 8 30-12-2016 16:09:51

தெருக்களும் ஆங்கிலக் கவி கோல்ட்ஸ்மித் (1770இல்) தீட்டிய 'பாழ் பட்ட கிராமம்' (Oliver Goldsmith, 'The Deserted Village') என்ற சித்தி ரத்தை ஒத்திருக்கும். வீடு, நிலம், தோப்பு என்று எல்லாவற்றையும் வல்லி சாக விற்றுவிட்டோ, கைவிட்டோ சென்ற குடும்பங்கள் ஏராளம். நகரங் கள் பெருகும்போது இது வழக்கம் என்று சொல்லலாம். ஆனால், வழக்க மான சமூக நடப்பாக நாம் விவரிப்பதிலிருந்து அளவிலும் தன்மையிலும் இது வேறுபட்ட நிகழ்வு. தொடர்ந்து அங்கேயே இருந்த குடும்பங்கள் தாமாகவே பழைய குடும்பங்களாகின்றன. இப்போது இருக்கும் காவிரிப் படுகையைப் பெருங்காயம் இருந்த பாண்டம் என்று வேடிக்கையாகச் சொல்வது உண்டு.

நான் மாற்றங்களைக் குறிப்பிடும் கையோடு அவற்றை நொந்துகொள்வ தாகவும் சிலருக்குத் தோன்றலாம். இவர் பழமைவாதி. அந்தப் பித்தத்தில் போனதை நினைத்துப் புலம்புகிறார் என்றும் சிலர் நினைக்கலாம். இருந்து, மறைந்தவற்றை அறிந்திருந்தவர்கள் குறைவு. கொஞ்சநஞ்சம் இருப்பவை யும் விரைவில் மறைந்துவிடும். இவற்றை எழுதுவதற்கு இதைவிட மேலான நியாயம் வேண்டுமா என்று கேட்டார்கள் நண்பர்கள். சென்றவை சென்றவைதான், இருப்பதெல்லாம் புதிதாக வந்தவையே என்பதைவிட, மேலானது என்ற ஒரு மூன்றாவது நிலைமையும் உண்டு. செல்பவையும், அவற்றின் இடத்துக்கு வருபவையும் இழைந்து, மூன்றாவதாக ஒன்று உரு வாகிக்கொண்டே இருப்பது முதிர்ந்த பண்பாட்டின் இயக்கம். இந்த இசை வும், இழைவும் நுணுக்கமாக, நாம் முயலாமல், நடைபெறுவது. இப்படி நடைபெறுவதற்குச் சென்றவையெல்லாம் இன்னின்ன என்று சமுதாயத் துக்கு நினைவுடுத்தும் எழுத்தும் வேண்டும். இனி திரும்பி வராதவற்றைப் பற்றி எழுதும்போது நெஞ்சிலிருந்து உரித்துப் பிரித்த சொற்களின் வாஞ்சை இயற்கைதானே! அறுபது ஆண்டுகளுக்கு அப்பாலிருந்து ஒரு மனம் தற்காலத்தோடு உரையாடுவது கட்டுரைகளின் சில இடங்களில் உங்க ளுக்கு கேட்கலாம்.

பண்பாடு என்றால் போற்ற வேண்டியதும், காக்க வேண்டியதும் மட் டுமே என்பது இல்லை. காவிரிக் கரையின் பண்பாடு அப்போதிருந்த சமூ கப் பொருளாதார அமைப்பின் விளைவு என்பது ஒரு சித்தாந்த விளக்கம். அந்த அமைப்புக்குரிய பொதுவான குறைகளும் கேடுகளும், காவிரிப் படு கையின் அன்றைய சூழலில் அவை அடைந்த அதீத நிலைகளும் பண்பாட் டுத் தளத்தில் நாம் வெறுக்கும் வடிவங்களைப் பெற்றன. இவற்றையும் சில இடங்களில் சொல்லியிருக்கிறேன். ஆனால், வரலாற்றில் பொதுவாகப் புழங்கும் வகைப்பாடுகளை மட்டுமே கொண்டு காவிரிக் கரையை எந்த அளவுக்குப் புரிந்துகொள்ள முடியும் என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். காவிரி தந்த உயிர்ப்பைப் பண்பாட்டு வழக்கங்களாக, புலன் அனுபவங்க

ளாக, அவை மனிதனின் பூர்வகால பிரக்ஞையாகத் தோன்றினாலும், அப்படியே தருவதற்கு மீறிய ஒரு வேலையை நான் செய்ய முயலவில்லை.

எல்லாருக்கும் நன்றாகத் தெரிந்திருக்கும் கதை, நாவல், கட்டுரைகளின் எழுத்து வலைக்குள் அகப்படாத காவிரிப் படுகையின் பண்பாட்டு விவ ரங்களைத் தருவதற்கு முயன்றிருக்கிறேன். அந்த வலைக்குள் இவை ஏன் முன்பே அகப்படவில்லை என்பதற்குச் சித்தாந்த ரீதியிலான காரணங் களை ஆராய்வது இங்கே பொருத்தமாகாது. மனிதனை மையப்படுத்துவதற் காக காவிரியைப் பின்புலமாக வைத்துக்கொண்ட எழுத்தோவியங்கள் ஏராளம். மனிதனுக்கு முன்னே எனக்குக் கண்ணை நிறைத்து நிற்பது காவிரி. அது கண்ணை மறைத்தும் இருக்கலாம் என்று நீங்கள் ஜாடை பேசுவதும் கேட்கிறது!

‘‘நீங்கள் நூறு ஆண்டுகளுக்கு முன்பு நமது ஊரிலிருந்து நீடாமங்கலம் செல்கிறீர்கள். உங்கள் பயண அனுபவத்தை எழுதுங்கள்’’ என்று என் மாணவர்களுக்கு ஒரு வேலை கொடுத்தேன். பலரும் அவர்கள் அனு பவத்தில் இருந்ததுபோல் எழுதாமல், புத்தகங்களில் ஒரு முன்மாதிரியைப் பார்த்ததுபோல் எழுதியிருந்தார்கள். முன்மாதிரியாக எதையாவது வைத்துக்கொண்டிருக்கும் எழுத்தில் அனுபவத்தின் மெய்மை இருக்காது. முன்மாதிரியாகச் செயல்படும் ஒன்று எழுத்தின் சுதந்திரத்தைக் குறைத்து விடுவதாக நினைத்து, வலுவில் அதற்கு எதிரான நிலையை எடுத்துக்கொண்டு எழுதுவதிலும் மெய்மை இருக்காது. இங்கிலாந்தின் சமூக வரலாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அந்த மக்கள் உண்டது என்ன, உடுத்தியது எது என்று விவரமாகக் கூறும். நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நமது சமுதாயத்தின் வழக்கங்களை நம்மால் விவரமாகச் சொல்ல முடியாது. ஆனாலும், சங்ககால இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு அக்காலத் துச் சமூகத்தை ஊகித்துவிடுகிறோம். நிகழ்காலத்துக்குச் சற்று முந்தைய காலம் நமது பிரக்ஞையிலிருக்கும் ‘நேற்று’ என்பதற்குள் இல்லை. இந்த விந்தையான பின்னணியில்தான் நான் சொல்லிய வேலையை மாணவர் களுக்குக் கொடுத்தேன். அவர்களுக்கோ புத்தகத்திலிருப்பதிலிருந்து கண் ணைத் தூக்கி வெளியே பார்ப்பது கல்விக்கூடங்களில் செய்யத் தகுந்த தாகப் படவில்லை. நவீனம் உள்ளே வரும்போது நவீனத்துக்குச் சற்று முன்பிருந்தது வெளியேறியது. இந்தப் போக்கு, வரத்துபற்றிய நமது சமூக வரலாற்றை மாணவர்கள் விரிவாக எழுத வேண்டும் என்று சொல்வேன்.

இயற்கையை ஒரு சித்திரமாக வரையுங்கள் என்று குழந்தைகளிடம் சொல்லிப்பாருங்கள். இரண்டு மூன்று மலை முகடுகள், தவறாமல் ஒரு அருவி, ஒரு ஓடை, கிளைவிரித்த மரங்கள், பொலியும் பழமையில் மரப் பாலம் என்று ஒரு சித்திரம் வரும். காவிரிப் படுகையில் மலை, அருவி எல்

லாம் இல்லை. வயல்வெளியில் இருக்கும் கருவை மரத்தைக்கூடப் பெரிய தாக வளரவிட மாட்டார்கள். மாடுகளுக்குக் கொம்பு இருக்காது. வீடு களுக்குக் கீற்றுக் கூரை அல்லது நாட்டு ஓடு. மண் சாந்து வைத்துச் சித்துக் கல்லால் கட்டிய சுவர் மேற்பூச்சு இல்லாமல் நிற்கும். மொத்தத்தில் சம்பிரதாயமான இயற்கையின் அழகு இங்கே இருக்காது. இங்கேயும் இயற்கை உண்டு என்று காட்ட முயன்றிருக்கிறேன். காலம்காலமாக எழுத்தை வார்த்துக் கொடுத்த அச்சு ஒன்றை உடைக்கும் முயற்சி. பொட்ட லாக நிற்கும் வயல்வெளியான பட்டக்காலிலும், நடக்கும் வரப்பிலிருக் கும் மீன்முள்ளிலும் அழகு இருக்காதா? கவிதைக்கு இந்தப் பொருள் தான் பொருந்தும் என்றிருந்ததைப் பெருக்கித் தள்ளி, எதைக் கொண்டும் கவிதை எழுதலாம் என்று காட்டினார்களல்லவா! அந்த இலக்கியப் புரட்சி யின் கண்ணுக்குக் காவிரிப் படுகையின் கீழத் தஞ்சையும் தெரிய வேண் டுமே என்று இவற்றை எழுதினேன்.

இதுதான் எழுத வேண்டிய பொருள், இதுதான் சித்திரம், இவைதான் சொற்களும் சொற்களின் கோவையும் என்று இருந்தவற்றுக்கு ஒரு மாற்று வேண்டாமா? இலக்கிய வழக்கின் சொற்களில் நாம் முயன்று காட்ட வேண்டாத கவித்துவம் தன்னால் நிரம்பியிருக்கலாம். ஆனால், எழுத் துருவே பெறாவிட்டாலும் அனுபவத்தின் மெய்மையாக இருக்கும் கீழத் தஞ்சையின் பாமரச் சொற்களுக்கும் கவர்ச்சி உண்டு. பாமரச் சொற்களில் இருக்கும் துல்லியம் படித்து வந்தவற்றுள் இல்லை. அனுபவத்துக்குள்ளே நம்மை அழைக்கும் அடையா நெடுங்கதவு இந்தப் பாமரச் சொற்கள்.

ஐந்து மணி என்று சொல்கிறோம். ஐந்து மில்லிமீட்டர் மழை என்று சொல்கிறோம். இது துறை சார்ந்த மொழி. தகவல் தர வல்லது. ஆனால், அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள பொருத்தமானதல்ல. இந்த மொழியில் சொன்னதையே, 'நிலம் தெளியாத நேரம்', 'ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாத நேரம்', 'வாரித் தண்ணீர் ஊற்றாத மழை', 'நிலம் கருக்கப் பெய்யவில்லை.' என்று சொல்வார்கள். இது அனுபவத்தைப் பகிர உத வும். மொழி, அறிக்கை மொழியாகித் தகவல் மட்டும் தரலாம். அதே மொழி மற்றொரு நேரத்தில் ஒரு நபரின் உன்னதமான அனுபவத்தைத் தரலாம். இப்படி வினையும், அதற்கு எதிர்வினையுமாக மொழிக்குள் ஒரு இயக்கம் தொடர்ந்து இருக்கும். கருத்தும் அனுபவமும் பொது மொழியில், சமூகத்தின் சொல்லாடல்களில், ஒன்றோடு ஒன்று ஒட்டாமலேயே இருப் பது பண்பாட்டின் இசைகேடு, மனவெளியில் உள்ள விரிசல். அனுப வத்தை நமது மொழி நெருங்கிக்கொண்டே இருக்க வேண்டும். எண்க ளைப் போன்று சொற்களும் கருத்தளவிலேயே இருத்தலைக் கொண்டவை யாக இல்லாமல் புலனுக்கு எட்டும் கூறுகளோடும் அவை இருக்க வேண் டும். இதை மனத்தில் வைத்து பழைய நஞ்சையின் சொற்களைப் புது

*மொழிக்கு மாற்றாமல் எழுதினேன். சில சொற்கள் புரியவில்லை என்று பலர் சொன்னது எனக்கு ஒரு குறையாகப் படவில்லை. இந்த மொழிச் சிக்கல் நாம் மண்ணுக்கு அந்நியமாவதன் மற்றொரு அடையாளம் என்று எடுத்துக்கொண்டேன்.*

*வாசகர்கள் இவற்றைப் படிப்பதற்கு எவ்வளவு சுதந்திரம் உண்டோ அவ்வளவு சுதந்திரம் இவற்றைப் புரிந்துகொள்வதிலும் அவர்களுக்கு உண்டு. இப்படித்தான் புரிந்துகொள்ள வேண்டும் என்று நெறிப்படுத்தும் உரிமை எனக்கு இல்லை. மொழிக்குள் வருபவை மொழிக்குச் சொந்தம், எழுதியவருக்கல்ல. தன் வழியே மொழி அவற்றுக்குப் பொருளைத் தரும். எழுதுபவர் எவரைப் பற்றி வேண்டுமானாலும் இதையே சொல்லலாம். உள்ளதுதானே என்று உடனே ஏற்றுக்கொள்ளும் நிலையை நம்மிடையே இது இன்னும் அடையவில்லை. அதனால் இங்கே இப்படிச் சொல்லி வைக்கிறேன்.*

*அறுபது ஆண்டுகளுக்கு மேல் என்னுடைய அனுபவத்தில் இருந்தவற்றை எழுதினேன். அனுபவமே நாம். நாம் இருக்கிறோம், நமக்கு அனுபவம் வருகிறது என்ற இருமை கிடையாது. இந்த நிலைமையால் வரும் குறையும் நிறையும் நான் எழுதியவற்றுக்கும் இருக்கும். நானுமல்லாமல், வேறு எவருமல்லாமல், ஒருவருமல்லாமல் இருக்கும் ஒரு பொதுப் புள்ளியைத் தேடி அதில் நின்றுகொண்டு எழுத முடியாது. இதையும் நான் சொல்ல வேண்டும்.*

*நம்மாழ்வார் திருவாய்மொழியின் ஒவ்வொரு பத்துப் பாசுரங்களும் முற்றுப்பெறும்போது அடுத்ததாக ஒரு வெண்பாவைச் சேர்த்திருப்பார். அந்தப் பத்துப் பாடல்களிலும் நம்மாழ்வார் எதைச் சொல்கிறார் என்று வெண்பா மிகச் சுருக்கமாகக் கூறும். அதுவரை பத்துப் பாசுரங்களிலும் நாம் படித்தவை மனதுக்குள் இறைந்துகிடந்தாலும் இந்த வெண்பாவைப் படித்தவுடன் அவையெல்லாம் சட்டென்று திரண்டு, கண்டுகொண்டோம் என்ற கிளர்ச்சியைத் தரும் வகையில் ஒரு உருவம் பெறும். இந்த முன்னுரையும் அப்படியொரு பின்னுரை மரபைச் சேர்ந்ததாக இருப்பதே எனக்கு விருப்பம்.*

*தமிழ் நாளிதழ், 'தி இந்து', 2014ஆம் ஆண்டுமுதல் வெளியிட்ட என் கட்டுரைகளை நான் திருத்தி விரிவாக்கிய தொகுப்பு இது.*

*தங்க. ஜெயராமன்*<br>
*திருவாரூர்*<br>
***13.12.2016***

# 1

## ஊடகங்கள் காணாத காவிரி

செய்தி என்ற தகுதியை எட்டாதவை ஊடகங்களின் கண்களுக்குத் தெரிவதில்லை. ஊடகங்களின் கண்களுக்குத் தெரிபவை தவிர, மற்றவையெல்லாம் இருப்பதே இல்லை. அவற்றுக்கு இருப்பு என்பதே இல்லை. நமது பிரக்ஞையின் உருவாக்கத்தை ஊடகங்கள் இந்த அளவுக்கு நிர்ணயிக்கின்றன.

நன்கு தெரிந்தவற்றில்கூட ஊடகங்கள் காணாத கூறுகள் நமது பிரக்ஞையிலிருந்து மெல்லமெல்ல நழுவிவிடும், அல்லது அதன் விளிம்புக்கு வெளியிலேயே நின்றுவிடும்.

நாமெல்லாம் நன்கு அறிந்திருக்கும் காவிரி நதியை எடுத்துக்கொள்ளுங்களேன். இரண்டு மாநிலங்களுக்கு இடையிலான ஒரு தீராத பிரச்சினை என்பதுதான் தற்போது ஊடகங்கள் காணும் காவிரி. கூடுதலாக ஒன்றிரண்டைச் சேர்த்துக்கொள்ளலாம். காவிரியில் வெள்ளம் அல்லது நீர்வரத்து இல்லாத வறட்சி என்ற எதிரெதிரான இரண்டு அதீத நிலைகளும் ஊடகங்களின் கண்களுக்குத் தெரிந்தவை. அதீதங்களுக்கு இடைப்பட்ட நிலைகளும், இவை அல்லாத அழகான வேறு அம்சங்களும் காவிரிக்கு உண்டு என்பது ஊடகங்களுக்குத் தெரிவதில்லை. அதன் காரணமாகவே அவை நமது பிரக்ஞையிலிருந்து நழுவிக்கொண்டிருக்கின்றன. இப்படி ஊடகங்கள் காணாதவையாக நாம் காண்பவற்றைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

### மணல் வீடு

பதினெட்டாம்பெருக்கு விழாவில் மக்கள் திரளாகச் சென்று படையலிட்டுக் காவிரியை வணங்குவதை ஊடகங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. மேற்கிலிருந்து கிழக்காகக் காவிரியின் கரையில் உள்ள ஸ்ரீரங்கம், திருவையாறு, கும்பகோணம், மயிலாடுதுறைவரைக்கும்கூடக் காவிரியின் துறைகளில் விழா நடைபெறுவதைப் படங்களாகக் காணலாம். மக்கள்தொகையில் ஏறத்தாழ பாதி அளவுக்கு நகரவாசிகளாக இருக்கும் தமிழ்நாட்டில் இவ்வாறு நகரங்களை மையமாகக் கொண்ட செய்தி அளிப்பு ஒன்றும்

Vanaththin kizhe copy.indd 13 30-12-2016 16:09:51

*வியப்பல்ல. காவிரியின் பழைய நஞ்சை என்பது (12 லட்சம் ஏக்கர்) காவிரிப் பாசனப் பகுதி, வெண்ணாற்றுப் பாசனப் பகுதி என்று இரண்டு சம கூறுகளாகப் பரந்திருக்கிறது. வெண்ணாற்றுப் பகுதி கிராமங்களில் பதி னெட்டாம்பெருக்கு நிகழ்ந்த விதம் என்ன? அவற்றில் இன்னும் எஞ்சி இருப்பதையாவது நமது பிரக்ஞைக்கு மீட்டுக்கொள்ளலாம்.*

*வயதில் பெரியவரான கட்டுக்கழுத்தி கிராமத்தில் உள்ள மற்றவர்களை அழைத்துக்கொண்டு காவிரிக் கரைக்குச் செல்வார். காவிரியின் கிளை, வெண்ணாறு, கோரையாறு, பாமனியாறு, முள்ளியாறு, வெட்டாறு இப் படி எதுவாக இருந்தாலும், அதைக் காவிரி என்றுதான் அழைப்பார்கள். எல்லோரும் தேங்காய், பழங்கள் (குறிப்பாக, பேரிக்காய்), வெற்றிலைப் பாக்கு, பதினெட்டாம்பெருக்குக்கே உரிய சிவப்புக் காதோலை, கருப்பு வளையல், ஊறவைத்து வெல்லம், தேங்காய்ப் பல் கலந்த பச்சரிசி, பூச் சரம் ஆகியவற்றை எடுத்துச்செல்வார்கள். ஆற்றில் முழுகிமுழுகித் தாம் பாளங்களில் வெண் மணலை அள்ளிக்கொண்டு கரையேறுவார்கள். இந்த மணலால், வாசல் ஒன்று வைத்துப் படுகையில் சதுரமாக வீடு கட்டுவார் கள். பூஜை எல்லாம் இந்த வீட்டுக்குள்தான். எத்தனை பெண்கள் இருக்கி றார்களோ அத்தனை பேரும் புழங்குவதற்கு வசதியாக இந்த வீட்டைக் கட்டிக்கொள்வார்கள். ஈரச் சேலையை லாவகமாகப் பிழிந்து அதையே கட்டிக்கொண்டு வழிபாட்டை முடித்துக்கொள்வார்கள். மஞ்சள் தோய்த்த சரடு ஒன்றைக் கழுத்தில் கட்டிக்கொள்வார்கள். வீட்டில் உள்ள ஆண்க ளுக்கும் மஞ்சள் சரட்டை மணிக்கட்டில் ரட்சையாகக் கட்டிவிடுவார்கள். பூஜை முடிந்தவுடன் பழங்கள், காதோலை, வளையல் போன்றவற்றைக் காவிரி வெள்ளத்தில் வீசிவிடுவார்கள். இதற்காகவே, காத்துக்கொண்டிருக் கும் மாடு மேய்க்கும் சிறுவர்கள் ஆற்றில் தொப்பென்று குதித்து, நீந்திச் சென்று பழங்களை எடுத்துக்கொள்வார்கள். இவர்களின் கும்மாளத்தில் ஆறு இரண்டாகிவிடும். இது சில பகுதிகளில் நாள் முழுவதும் நடக்கும்.*

### ***காவிரியின் பாசாங்கு***

*புது மணத் தம்பதிகள், தாங்கள் திருமணத்தில் அணிந்திருந்த முகூர்த்த மாலைகளை அப்படியே வைத்திருந்து ஆடி மாதம் வரும் பதினெட்டாம் பெருக்கு நாளில் தம்பதிகளாகச் சென்று காவிரி வெள்ளத்தில் அவற்றை விட்டுவிடுவார்கள். இங்கே சாலையெல்லாம் காவிரிக் கரைதான். ஒரு பதி னெட்டாம்பெருக்கு நாளில் கருக்கலோடு புறப்பட்டுக் கிழக்கு மேற்காகப் பயணம் செய்திருக்கிறேன். பொங்கிவரும் புது நீரின் காவிரியில் பருவத் தின் பொலிவு தெரிந்தது. நிலந்தெளியும் நேரத்தில் துறை கண்ட இடத்தி லெல்லாம் இன்னும் வெட்கம் தெளியாத புது மணத் தம்பதிகள். மொர மொரக்கும் நூலும் பட்டுமாக, காவிரியில் இறங்குவதும் ஏறுவதுமாக*

இருந்தார்கள். பெண்ணைப் பெற்றவளைப் போல் இவர்களைக் காணும் ஆசையும், கழியாத நாணமுமாகக் காவிரி ஒரு பாசாங்கில் விரைந்துகொண் டிருந்தாள்.

சிறுவர்கள் சப்பரம் (தேர் அல்ல) கட்டி அதில் கழிக்க வேண்டிய பொருள் எதையாவது—பழைய புத்தகங்கள், ஓலைச்சுவடிகள்—வைத்துக் காவிரிக்கு இழுத்துச்சென்று விட்டுவிடுவார்கள். பச்சரிசியை ஊறவைத்து வெல்லம் கலந்து படைப்பதும், வழங்குவதும் பதினெட்டாம்பெருக்கு நாளில் மட்டும் அல்ல. பொன்னேர் கட்டும்போதும், விதைத் தெளிப்பு, அறுவடையின் கடைசி நாளான ஏடாங்கரிசியின்போதும் இந்த அரிசி தான் படையலும், தின்பண்டமும். பிறந்த குழந்தைக்குப் பெயர் வைக்கும் பதினாறாம் நாளிலும் கருப்பு வளையல் அணிவிப்பதுண்டு. காதோலை பெண்கள் அணியும் ஒரு பழைய காதணி.

### காவிரியின் வர்ண ஜாலம்

ஜூன் மாதம் மேட்டூர் அணை திறந்த ஆறாவது நாளில் காவிரியின் எல் லாக் கிளைகளிலும் காவி நிறத்தில் நுங்கும்நுரையுமாகத் தண்ணீர் கரை தொட்டு ஓடும். இதே ஆறாவது நாளில் காவிரிப் பகுதி நகரங்கள், கிரா மங்களின் குளம், குட்டைகளைப் புதுத் தண்ணீரால் நிரப்பிவிடுவார்கள். அப்போதெல்லாம் இருபத்திரண்டாயிரம் கனஅடி தண்ணீர் மேட்டூரில் திறந்தால் காவிரி தன் கிளைகள் எல்லாவற்றிலும் கரை ததும்பி ஓடும். வளமான வண்டலோடு வரும் நீரின் காவி நிறம் சன்னஞ்சன்னமாக மாறி, ஆடி மாத இறுதிக்குள் நீரின் இயல்பு நிறம் வந்துவிடும். பிறகு ஐப் பசி, கார்த்திகையின் அடைமழையில் காவிரி வடிகாலாகவே மாறி, களி மண் கலந்த கலங்கலாக ஓடும். மார்கழி, தை மாதங்களில் மணல் தெரியும் கண்ணாடியாகத் தெளிந்து நெளியும்.

புதுத் தண்ணீர் மட்டும் வண்டலோடு காவி நிறத்தில் கலங்கலாக வரும். அதைக் குடத்தில் எடுத்துவந்து தேத்தாகொட்டையை இழைத் துக் கலந்துவிட்டால் சற்று நேரத்தில் வண்டல் கீழே படிந்து தண்ணீர் தெளிந்து விடும். வீட்டுத் திண்ணைகளில் வந்து அமரும் வழிப்போக்கர் கள், ஆற்றுத் தண்ணீர் கொடுங்கள் என்று ஆசையாகக் கேட்டு வாங்கிக் குடிப்பார்கள்.

அடைமழைக் காலத்தில், சில நேரங்களில் வெண்ணாற்றுப் பகுதிகளில் காவிரி செக்கச்செவேலென்று கரை ததும்பிப் பாயும். இந்த நிறத்தைப் பார்த்துவிட்டால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டதுபோல் பயம் வந்துவிடும். புதுக்கோட்டை மாவட்டத் தில் பெய்யும் மழை, முதலைமுட்டி வாரி வழியாக வெண்ணாற்றில் வந்து விழுவதுதான் இந்தச் சிவப்புத் தண்ணீர். வெண்ணாற்றில் இது கலக்கும்

இடத்துக்குப் பிறகு கிழக்கே இதை மடைமாற்றுவதற்கோ தேக்குவதற்கோ வழியில்லாததால் வெள்ளம் வந்துவிடும் என்று விவசாயிகள் நடுங்கிப் போவார்கள்.

## பருவங்களின் உருவம்

காவிரி கரைபொழிந்து ஓடும்; பார் அடங்கி ஓடும்; இறங்கிக் கடந்தால் கால் நிலைக்கும் அளவுக்கு ஓடும்; பிறகு ஆற்றுக்குள்ளேயே ஓரமாக நெளிந்து, சிலுசிலுத்து மெலிந்த ஓடையாக ஓடும். இப்படி நிறமும், உருவமும் மாறிமாறிப் பருவங்களின் ஊடாகக் காவிரி ஜாலவித்தை காட்டுவாள்.

குளிப்பதற்காகப் பெண்கள் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாத காலைப் பொழுதில் காவிரித் துறைக்குச் செல்வார்கள். படித்துறைகளில் விளக்கு மாடங்கள் இருக்கும். இவற்றில் எடுத்துச்சென்ற கைவிளக்கை வைத்துவிட்டு அந்த வெளிச்சத்தில் குளியலை முடித்துவிடுவார்கள். பிறகு ஆறு மணியிலிருந்து காவிரியின் படித்துறைகளை ஆண்கள் ஆக்கிரமித்துக் கொள்வார்கள். சுமார் எட்டரை மணிக்கு மேல் மாடு இறங்கு துறைகளில், பசு மாடுகளைக் குளிப்பாட்டுவார்கள். இப்படியாக, ஐந்து மணியிலிருந்து காவிரியின் துறைகளெல்லாம் களேபரமாக இருக்கும்.

புது வெள்ளத்தை வரவேற்பது பதினெட்டாம்பெருக்கு என்ற விழா மட்டும் அல்ல. சடங்கு வடிவம் கொள்ளாத வரவேற்பும் உண்டு. கோடை முடியமுடிய ஒவ்வொரு கிராமத்திலும் மராமத்துப் பணிகள் மும்முரமாக நடக்கும். வரும் பசலிக்கு (சாகுபடி ஆண்டு) நீராணிக்கத்துக்காக (கிராம நீர் மேலாண்மைக்கு) ஆட்களை நியமித்து சம்பளம் நிர்ணயிப்பது, பாசன வாய்க்கால், வடிகால், குளம், குட்டை தூர் வாருவது, பஞ்சையான இடத்தில் கரையெடுத்துக் கட்டுவது, இவையெல்லாம் வேகவேகமாக நடக்கும். இதற்கான செலவுகளுக்கு அவரவர்களின் நில உடைமைக்கு ஏற்ப வரி வைத்துக் கிராமத்தில் வசூலித்துக்கொள்வார்கள். பொதுப்பணித் துறையும் தன் பங்குக்கு மதகுகளைச் செப்பனிடுவது, கண்மாயின் பலகைத் திருகாணிகளுக்கு எண்ணெய் விடுவதையெல்லாம் விரைந்து முடிக்கும்.

அணை திறந்து புதுத் தண்ணீர் வந்த ஒரு வாரத்துக்கெல்லாம் கடலிலிருந்து உள்ளகெண்டை என்ற மீன் இரவில் மும்முரமாக ஆற்றுப் போக்கை எதிர்த்து நீந்தி முப்பது, முப்பத்தைந்து கிலோமீட்டர்வரை காவிரியின் கிளைகளில் வந்துவிடும். இக்காலத்தில் வாளை மீன்களையும் ஆற்றில் பார்க்கலாம். புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வெள்ளிப் பாளங்களாகக் கெண்டை மீன் காவிரியில் வெள்ளமாகப் பெருகிவிடும். மார்கழி, தை மாதங்களில் அப்போது ஜனித்த கச்சப்பொடி என்ற மீனை மதகுக்கு மதகு கூடைகூடையாக அள்ளி மாளாது.